செய்தி வெளியீட்டு எண்.1029 நாள்: 29.12.2009

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

சென்னை மாநகர் (ம) புறநகர் பகுதிகளில் உள்ள பெரம்பூர், திருவொற்றியூர், வில்லிவாக்கம், ஆவடி, தி.நகர், சைதாப்பேட்டை, பரங்கிமலை, சோழிங்கநல்லூர், ஆகிய மண்டலங்களில் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளை 100% வீடு வீடாகச் சென்று தணிக்கை செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது. தணிக்கையின்போது இல்லாத குடும்பங்கள் மற்றும் முகவரி மாறிய குடும்பங்களின் குடும்ப அட்டைகளுக்கு பொருள் வழங்கல் நிறுத்தம் ஆணைகள் சம்மந்தப்பட்ட உதவி ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்டு அங்காடியில் <u>21.12.2009</u> அன்று முதல் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பொருள் நிறுத்தம் ஆணைகள் தொடர்பாக முறையீடு செய்ய ஏதுவாக இதுகாறும் பொருள் பெற்று வந்த நியாய விலை அங்காடியிலேயே முறையீடு படிவம் அச்சடித்து <u>இலவசமாக</u> வழங்கப்படுகிறது. அந்த படிவங்களை பெற்று அதில் விவரங்களை பூர்த்தி செய்து குடும்ப அட்டை நகல் மற்றும் இருப்பிட ஆதாரம் (வாக்காளர் அடையாள அட்டை நகல், வீட்டு வரி ரசீது நகல், ஓட்டுநர் உரிம நகல், பா!;போர்ட் நகல்,எரிவாயு சிலிண்டர் நிரப்பு ரசீது, அஞ்சல் துறை வழங்கும் இருப்பிட அடையாள அட்டை நகல், வங்கி சேமிப்பு புத்தக நகல்) ஒன்றின் நகலை இணைத்து நியாய விலைக்கடையிலேயே கொடுத்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். முறையீடு மனுக்கள் <u>31.01.2010 -</u>க்குள் அங்காடியில் கொடுக்கப்பட வேண்டும். அங்காடியில் முறையீடு மனு அளித்த குடும்ப அட்டைகளுக்கு அவர்களது முறையீடு மீதான இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் வரை தொடர்ந்து பொருள் வழங்கப்படும். இந்த மனுக்கள் மீது நேரடி விசாரணை செய்து உண்மையில் வசிப்பவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு குடும்ப அட்டையில் உரிய முகவரி மாற்றம் செய்து கொடுத்து தொடர்ந்து பொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வசிக்காத குடும்பங்களுக்குரிய குடும்ப அட்டைகள் மட்டுமே ரத்து செய்யப்படும். எனவே உண்மையான குடும்ப அட்டைதாரர்கள் எவரும் இது தொடர்பாக கவலை அடையத் தேவையில்லை. மேலும் பொருள் நிறுத்தம் தொடர்பாக உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு சென்று அலைய வேண்டாம் என குடும்ப அட்டைதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், அட்டைதாரர்கள் வசதிக்காக பொருள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ள அனைத்து குடும்ப அட்டைகள் குறித்த விவரம் கீழ்க்கண்ட இணையதளத்தில் தமிழ் மற்றம் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**http://www.consumer.tn.gov.in/cardstatus**

மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தங்களது குடும்ப அட்டை எண்ணை மட்டும் பதிவு செய்தால் அந்த குடும்ப அட்டை தற்காலிக பொருள் நிறுத்த ஆணையில் இடம்பெற்றுள்ளதா இல்லையா என்பதை தெரிந்துகொள்ளலாம். தங்களின் குடும்ப அட்டை தற்காலிக பொருள் நிறுத்த ஆணையில் இடம்பெற்றிருந்தால் இதே இணையதளத்திலுள்ள முறையீட்டு மனுவினை தரவிறக்கம் (Download) செய்து மனுவினை பூர்த்தி செய்து இணைப்புகளுடன் சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடையில் நேரில் கொடுத்து ஒப்புதல் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்விவரம் குறித்து ஏற்கனவே 22.12.2209 அன்று பத்திரிகைகளில் விரிவான செய்தி வெளியிடப்பட்டது, இருப்பினும் பொது மக்கள் நலனை கருத்திற்கொண்டு நினைவூட்டும் விதமாக மீண்டும் இச்செய்தி வெளியிடப்படுகிறது.

இது பற்றி சந்தேகங்கள் இருப்பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

| வ.எண் | மண்டலங்கள் | தொலைபேசி எண்கள் | உதவி ஆணையாளர்களின் செல்லிடபேசி எண்கள் |
|---|---|---|---|
| 1 | துணை ஆணையர்(நகரம்) தெற்கு | 28551026 | 9445000160 |
| 2 | தி.நகர் | 28156674 | 9445000161 |
| 3 | பரங்கிமலை | 22604411 | 9445000163 |
| 4 | சைதாப்பேட்டை | 24328198 | 9445000165 |
| 5 | சோழிங்கநல்லூர் | 24502575 | 9445000402 |

| **வ.எண்** | **மண்டலங்கள்** | **தொலைபேசி எண்கள்** | **உதவி ஆணையாளர்களின் செல்லிடபேசி எண்கள்** |
|---|---|---|---|
| 1 | துணை ஆணையர்(நகரம்)வடக்கு | 28551028 | 9445000152 |
| 2 | பெரம்பூர் | 25593050 | 9445000154 |
| 3 | வில்லிவாக்கம் | 26171451 | 9445000157 |
| 4 | திருவொற்றியூர் | 25992828 | 9445000159 |
| 5 | ஆவடி | 26375560 | 9445000403 |

**மாநில நுகர்வோர் சேவை மையம் :- 28592828**

(ஒம்.) க. ரா$ாராமன்,
ஆணையாளர்.

ஆணையாளருக்காக.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.